**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ஒ.மு.எண்.4426 /ஆ4/2025 நாள்.01.09.2025**

| | |
|---|---|
| பொருள் : | தேர்வுகள் – வேலூர் மாவட்டம் –சென்னை-6 அரசுத் தேர்வுகள் இயக்ககம், மார்ச் /ஏப்ரல்– 2026 பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுப்பணி கையேடுகள் திருத்தங்கள் மற்றும் புதிய இணைப்புகள் – சார்பு. |
| பார்வை : | 1.சென்னை அரசு தேர்வுகள் இயக்குநரின் ந.க.ண்.012800 /எச்1/2025 நாள் 28.08.2025 |

*********

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி நடைபெறவுள்ள மார்ச் / ஏப்ரல் 2026, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு / இடைநிலைப் பொதுத் தேர்வுகள் தொடர்பாக, ஆய்வு அலுவலர்கள், முதன்மைக் கண்காணிப்பாளர்கள், வினாத்தாள் கட்டுக்காப்பாளர்கள், வழித்தட அலுவலர்கள், துறை அலுவலர்கள், அறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் பறக்கும் படை உறுப்பினர்கள் உள்ளிட்ட தேர்வுப் பணிகளில் ஈடுபடும் அனைத்து நிலைப் பணியாளர்களுக்கும், அவரவரது பணிகள் மற்றும் கடமைகள் குறிப்பிடப்பட்ட தேர்வுப் பணிகளுக்கான கையேடு (Hand Book on Examination Duties & Responsibilities), தேர்வுகள் துவங்குவதற்கு முன்னதாக இவ்வியக்ககத்திலிருந்து தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு, அனுப்பப்பட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுள்ளது.

எனவே மேற்படி தேர்வுப் பணிகளுக்கான கையேடு தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளதால், கடந்த ஆண்டில் அனைத்து மாவட்டங்களில் அமைந்த அனைத்து தேர்வு மையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்ட தேர்வுப் பணிகளுக்கான மார்ச்/ஏப்ரல் 2025 கையேட்டின் மென்நகல் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் இணைப்பில் காணும் கையேட்டின் அனைத்துப் பகுதிகளையும் கவனத்துடன் படித்து அதில் திருத்தங்கள் ஏதேனும் மேற்கொள்ள வேண்டியிருப்பின் அல்லது கடந்த ஆண்டிலிருந்த நடைமுறையில் இவ்வாண்டு ஏதேனும் இணைக்கும் அல்லது நீக்க வேண்டியிருப்பின், அவற்றை பக்க எண்/ பத்தி எண் வாரியாக குறிப்பிட்டும், கையேட்டின் பக்கத்தில் அதனை சுட்டிக்காட்டி (Highlighted), அப்பக்கத்தினை Scan செய்து 12.09.2025 –க்குள் வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கடந்த ஆண்டு தேர்வுகளின் போது தங்களது கவனத்திற்கு கொண்டு வரப்பெற்ற நடைமுறைச் சிக்கல்கள் ஏதேனும் இருப்பின், அவை குறித்தும் அவற்றிற்கான தீர்வு குறித்தும் இவ்வாண்டிற்கான கையேட்டில் சேர்க்கலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு : (Hand Book on Examination Duties & Responsibilities)

முதன்மைக் கல்வி அலுவலர்,(பொ)
வேலூர்.

பெறுநர்,
அனைத்து அரசு பள்ளிகள்,அரசு உதவி பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ,வேலூர் மாவட்டம்

நகல்:

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்) தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.